<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 395/2012 | சாட்சி | பி.வா.சா.4 |
| பெயர் | சின்னதம்பி | நாள் | 26.04.2024 |
| தகப்பனார் பெயர் | முத்துக்கவுண்டர் | | |

<u>வாதி தரப்பில் பி.வா.சா.4 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

24) தாவா சொத்தில் ஒரு வில்லை வீடும், ஒரு சிமெண்ட் அட்டை வீடும், ஒரு கூரை வீடும் உள்ளது என்றால், கூரை இல்லை. மேற்படி மூன்று வீடுகளுக்கும் மின் இணைப்பு உள்ளது என்றால், இரண்டு வீடுகளுக்கு மட்டும் தான் உள்ளது. மேற்படி வீடுகளை நான் பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். வழக்குரையில் வாதிகளால் மூன்று வீடுகள் உள்ளதாக சொல்லியுள்ள நிலையில், அது குறித்து நான் இதுவரை மறுப்பு தெரிவித்துள்ளேனா என்றால், இல்லை.

25) வையாபுரியும், பழனியப்பனும் வாய்மொழியாக பிரித்துக்கொண்டதாக சொல்லும் நிலையில் எவ்வாறு பாகம் பிரித்துள்ளனர் என்றால், மொத்த சொத்தையும், இரண்டாக பாகம் பிரித்துக்கொண்டுள்ளனர். கடந்த 11.07.2012ம் தேதியில் 3ம் பிரதிவாதியான மயிலிக்கு பாத்தியப்பட்டதாக சொல்லும் சொத்துக்களை அவர் 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரய ஆவணம் எழுதிக்கொடுத்தாக நான் சொல்லியுள்ளேனா என்றால், ஆமாம். மேற்படி கிரய ஆவணம் இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்பா, அல்லது பின்பா என்றால், இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்பே எழுதிக்கொடுக்கப்பட்டது.

26) மேற்படி கிரயம் செய்தது குறித்து வாதி பழனியப்பனுக்கு நான் நேரடியாக சொன்னேனா என்றால், இல்லை. மேற்படி பழனியப்பனுடன் எப்போதும் எனக்கு நல்ல பேச்சுவார்த்தை உண்டு என்றால், சரிதான். மேற்படி கிரயம் செய்வதற்கு முன்பு நான் என் மாமனார் 1ம் பிரதிவாதி வையாபுரியிடம் மேற்படி வாய்மொழி பாகபிரிவினையில் அவருக்கு பாகமாக ஒதுக்கப்ட்ட சொத்து குறித்து முறையாக ஆவணம் ஏற்படுத்திக்கொண்டு பின்னிட்டு அது தொடர்பாக கிரய ஆவணங்கள் ஏற்படுத்தி கொள்ளுமாறு நான் அறிவுரை கூறினேனா என்றால், இல்லை.

27) மேற்படி மயிலியும், என் பாட்டி ஐயம்மாளும், வையாபுரியும் மேற்படி ஐயம்மாளின் இறுதி காலம் வரை ஒன்றாகத்தான் இருந்தார்கள் என்றால், சரிதான். மேற்படி ஐயம்மாள் மயிலியின் பெயருக்கு எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயிலில் வாதி பழனியப்பன் ஏதேனும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளாரா அல்லது மேற்படி உயில் ஆவணம் குறித்து அவருக்கு ஏதேனும் தெரிவிக்கப்பட்டதா என்றால், அது குறித்து அவருக்கு தெரியாது. அவர் சாட்சி கையெழுத்தும் போடவில்லை.

28) தற்போது இவ்வழக்கு சொத்துக்கள் மேற்படி குப்பண்ண கவுண்டர்–ஐயம்மாள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால், சரிதான். மேற்படி வாய்மொழி பாகபிரிவினை ஏறப்ட்ட சமயத்தில் மேற்படி ஐயம்மாள் உயிருடன் இருந்தவரையில் அவர் மேற்படி முழு சொத்தையும் பராமரித்துக்கொள்ள வேண்டும் என்றும், அவர் இறந்ததற்கு பின்னிட்டு, மேற்படி சொத்துக்களை வாதியும், 1ம் பிரதிவாதியும் வாய்மொழியாக பிரிந்த சொத்துக்கள் குறித்து முறைபடி ஆவணம் செய்துகொள்ளவேண்டியது என தான் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால், சரியல்ல. மேற்படி பஞ்சாயத்து நடந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரியல்ல.

29) மேற்படி சங்கதிகள் குறித்து எனக்கு நன்றாக தெரியும் என்றாலும், இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி என் மாமனார் என்பதாலும், 2ம் பிரதிவாதி என் மைத்துனர் என்பதாலும், மேற்படி மயிலி பெயரில் ஐயம்மாள் உயில் எழுதி வைத்ததாகவும், அதனடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டதாகவும் கூறி 0.65 செண்ட் நிலத்தை 1, 2 பிரதிவாதிகள் அபகரிக்க முயற்சித்து, அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

30) மேற்படி 1, 2 பிரதிவாதிகள் பெயரில் எப்போது கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால், தேதி, தெரியாது. சுமார் 12 ஆண்டுகள் இருக்கும். மேற்படி கிரய தொகை எவ்வளவு பேசினார்கள் என்றால், ரூ.1,09,000/– பேசினார்கள். எதனால் மேற்படி கிரயத்தின் பொழுது வாதி பழனியப்பனுக்கு தகவல் கொடுக்கவில்லை என்பதற்கு

குறிப்பாக ஏதேனும் காரணம் உள்ளதா என்றால், தெரியாது. மேற்படி கிரய ஆவணத்தை யார் தயாரித்தது என்றால், அது குறித்து எனக்கு சரியாக தெரியாது. மேற்படி பத்திரம் எவ்வளவு தொகைக்கு, யாரிடம் வாங்கப்பட்டது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி பத்திரத்தில் நான் எத்தனையாவது சாட்சியாக கையெழுத்திட்டுள்ளேன் என்றால், அது குறித்து எனக்கு சரியாக நினைவில்லை.

31) மேற்படி கிரயம் செய்வதற்கு முன்பு கிரய பத்திரத்தில் கண்டுள்ள சொத்து குறித்து, வருவாய் துறை ஆவணங்கள் ஏதேனும் சமர்ப்பிக்கப்பட்டதா என்றால், இல்லை. மேற்படி நிலம் விற்பதற்கு முன்பு அளக்கப்பட்டதா என்றால், இல்லை. மேற்படி உயில் ஆவணமும், கிரய ஆவணமும் வாதிக்கு தெரியாமல், மேற்படி ஐயம்மாள் வையாபுரியின் பராமரிப்பில் இருந்தததை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு, வாதியின் உரிமையை அபகரிக்கும் நோக்கில் வாதிக்கு தெரியாமல், ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி ஆவணங்கள் ஒருபோதும் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும், அவை சட்ட வலுவற்றவை என்றாலும், அவை வாதியின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றாலும், சரியல்ல.

32) மேற்படி 0.65 சென்ட் நிலத்தை பொறுத்து வாதி இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. இவ்வழக்கு என் தாயார் அம்மாசி இறந்ததற்கு பின்னிட்டு, அவர் உயிருடன் உள்ளதாக கூறி பொய்யாக தாக்கல் செய்யப்பட்டதாக நான் கூறியுள்ளேனா என்றால், ஆமாம். இவ்வழக்கு தாக்கல் செய்த பின்பு அழைப்பாணை என் தாயார் இறந்துவிட்டதாக திருப்பப்பட்ட நிலையில், வாதி என்னையும், என் சகோதரர்களையும் இவ்வழக்கில் கட்சி சேர்த்து நடவடிக்கை எடுத்துள்ளார் என்றால், சரிதான். அதனடிப்படையில்தான் தற்போது இவ்வழக்கில் நாங்கள் எதிர்வாதம் செய்து வருகிறோம் என்றால், சரிதான்.

33) இவ்வழக்கில் என் தாயார் இறந்ததை அங்கீகரித்தும், எங்களை கட்சி சேர்த்தும், இவ்வழக்கு நடைபெற்று வரும் நிலையில், அவ்வாறு எங்களை கட்சி சேர்த்தது தவறானது என கூறியோ, என் தாயார் அம்மாசி இறந்துவிட்ட நிலையில் அவர்

உயிருடன் உள்ளதாக கூறி இவ்வழக்கு தாக்கல் செய்ததால், இவ்வழக்கு பாதிப்படைகிறது என்றோ ஏதேனும் மேல் முறையீடு செய்துள்ளோமா என்றால், இல்லை.

34) அவ்வாறுள்ள நிலையில், பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நான் சொல்வது தவறானது என்றால், சரியல்ல. அனைத்து வாரிசுகளையும் முறையாக சேர்த்துதான் வாதி இவ்வழக்கை நடத்தி வருகிறார் என்றால், சரிதான். மேற்படி குப்பண்ண கவுண்டர்–ஐயம்மாள் தம்பதியினரின் குடும்பத்தை சேர்ந்த நபர்களை தவிர வேறு யாரையும் இவ்வழக்கில் வாதி கட்சி சேர்க்கவில்லை என்றால், சரிதான். அதனால் தேவையற்ற தரப்பினர்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளதாக சொல்வது தவறானது என்றால், சரியல்ல.

35) குப்பண்ண கவுண்டர்–ஐயம்மாள் தம்பதியினருக்கு இவ்வழக்கில் காட்டப்பட்டுள்ள சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால், சரிதான். அதனால், பரம்பரை சொத்துக்களில் சிலவற்றை விட்டுவிட்டு, இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக நான் சொல்லியுள்ளேனா என்றால், அவ்வாறு சொல்லவில்லை. இவ்வழக்கில் ஏதேனும் சொத்து தவறாக காட்டப்பட்டுள்ளதாக நான் சொல்லியுள்ளேனா என்றால், அவ்வாறு சொல்லவில்லை. வழக்கு சொத்துக்களுக்கு என்ன மதிப்பு காட்டப்பட்டுள்ளது எனக்கு தெரியாது என்றால், சரிதான்.

36) நான் குறிப்பாக என் முதல் விசாரணை சாட்சியத்தில் வழக்கு சொத்தின் மதிப்பு தவறாக சொல்லப்பட்டுள்ளது என நான் சொல்லியுள்ளேனா என்றால், அவ்வாறு நான் சொல்லவில்லை. குப்பண்ண கவுண்டர்–ஐயம்மாள் தம்பதியினரின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவர்களது மகன்களான வாதி மற்றும் 1ம் பிரதிவாதியிடையே பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொள்வது குறித்து எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால், சரிதான்.

37) மயிலி பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள உயிலும், அதனடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள கிரய ஆவணமும் சட்டப்படி செல்லாதவை என்பதால், அவை ரத்து செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் என் நெருங்கிய உறவினர்கள் என்பதால், அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அதனை பொறுத்து, என் சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றாலும், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.